**09.01.2019**

# பத்திரிக்கைச் செய்தி

## சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் சார்பில் 3 நாள் பொங்கல் கலைவிழா

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் சார்பில் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் மெட்ரோ பொங்கல் கலைவிழா இந்த ஆண்டு ஜனவரி 10, 11 மற்றும் 12 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது. தஞ்சையில் உள்ள தென்னக பண்பாடு இணைந்து மையத்துடன் இனைந்து தென்னிந்திய மாநிலங்களின் பல்வேறு கலைகள் மற்றும் கலாச்சார நிகழ்வுகளோடு கொண்டாடப்படவுள்ள இவ்விழா சைதாப்பேட்டை, எழும்பூர் மற்றும் திருமங்கலம் மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெறவுள்ளது.

### முதல் நாள் நிகழ்வு

10-01-2019 வியாழக்கிழமை அன்று சைதாப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையத்தில் மாலை 5.30 மணிக்கு தெலுங்கானாவைச் சேர்ந்த திரு.அந்தாசி நாராயணா குழுவினரின் ஆதிவாசிகள் தப்பாட்டம் கலைநிகழ்ச்சி. தொடர்ந்து மாலை 6.30 மணிக்கு திருவாரூர் கலைச்சுடர்மணி திரு.கே.ஜெகன்நாதன் குழுவினரின் கரகம், காவடி, காளியாட்டம், கொக்கலிக்கட்டை உள்ளிட்ட பல்வேறு நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சிகள் நடைபெறுகிறது. அன்றிரவு 7.30 மணிக்கு தஞ்சை கலைச்சுடர்மணி திரு.டி.ஜி.ராஜுகுழுவினரின் தப்பாட்டம் கலைநிகழ்ச்சி நடைபெறுகிறது.

**இரண்டாவது நாள் நிகழ்வு**

11.01.2019 வெள்ளிக்கிழமை அன்று எழும்பூர் மெட்ரோ இரயில் நிலையத்தில் தெலுங்கானாவைச் சேர்ந்த திரு.அந்தாசி நாராயணா குழுவினரின் ஆதிவாசிகள் தப்பாட்டம் கலைநிகழ்ச்சி மாலை 5.30 மணிக்கு நடைபெறுகிறது. தொடர்ந்து திருவாரூர் கலைச்சுடர்மணி திரு.கே.ஜெகன்நாதன் குழுவினரின் நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சிகள் மாலை 6.30 மணிக்கு நடைபெறுகிறது. இரவு 7.30 மணிக்கு தஞ்சை கலைச்சுடர்மணி திரு.டி.ஜி.ராஜூ குழுவினரின் தெருக்கூத்து கலைநிகழ்ச்சி நடைபெறுகிறது.

**மூன்றாம் நாள் நிகழ்வு**

12.01.2019 சனிக்கிழமை அன்று திருமங்கலம் மெட்ரோ இரயில் நிலையத்தில் தெலுங்கானாவைச் சேர்ந்த திரு.அந்தாசி நாராயணா குழுவினரின் ஆதிவாசிகள் தப்பாட்டம் கலைநிகழ்ச்சி மாலை 5.30 மணிக்கு நடைபெறுகிறது. தொடர்ந்து மாலை 6.30 மணிக்கு துரோணாச்சாரியார், நாட்டியகலா சூடாமணி திருமதி.விஜயம் கார்த்திக் குழுவினரின் பரதநாட்டியம் பல்சுவை நிகழ்ச்சி நடைபெறுகிறது . இறுதியாக அன்று இரவு 7.30 மணிக்கு திருவாரூர் கலைச்சுடர்மணி திரு.கே.ஜெகன்நாதன் குழுவினரின் நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சி நடைபெறுகிறது.

மூன்று நாள் பொங்கல் கலைவிழா நிகழ்வுகளையும் பொதுமக்கள் கண்டு மகிழ சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் சிறப்பான ஏற்பாடுகளை செய்துள்ளது எனவே மெட்ரோ இரயில் பயணியர், பொது மக்கள் மற்றும் பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்கள் இப்பொங்கல் கலைவிழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். அனைவருக்கும் அனுமதி இலவசம்.